# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 06 புதன்கிழமை (20.03.2002) தொலைபேசி 3378 ஒலி 91







## தமிழீழத்திற்கு சமமான தீர்வு வேண்டும்

## அமெரிக்கா உட்பட உலகில் எவராலும்

# தமிழீழ விடுதலைப் புலிகளை

# அடிபணிய வைக்க முடியாது

## இந்துஸ்தானுக்குக் கரிகாலன் பேட்டி

(நமது சிறப்புச் செய்தியாளர்)

**அமெரிக்கா உட்பட உலகின் எந்த மூலையில் இருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கும் நாம் அடிபணியமாட்டோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்துஸ்தான் நாளிதழுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தூதுவர் அல்ஸி வில்ஸ் அண்மையில் விடுதலைப் புலிகள் தொடர்பாக விடுத்த அறிக்கையில், விடுதலைப் புலிகள் ஆட்கடத்தல், மற்றும் கப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவது சர்வதேச சமூகத்தின் மத்தியில் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிநேரிடும் என தெரிவிக்கப்பட்டமைக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்காவினால் தெரிவிக்கப்பட்ட இக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆதாரமற்றவை. எம்மை யாராலும் பயமுறுத்தி அடிபணிய வைக்க முடியாது என்று கரிகாலன் கூறினார். அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

(2ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வரலாறு காணாத பொங்கு தமிழ் எழுச்சி பிரவாகம்

## 50 ஆயிரம் மக்கள் பங்கேற்பு

(திருமலை)

தமிழ் மக்களின் அபிலாசைகளையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியும், மரபு வழித் தாயகம் தமிழ் மக்களின் தமிழ்த் தேசியம் என்பவற்றை வலியுறுத்தியும் நேற்று பெரும் எடுப்பில் உணர்வுபூர்வமாக திருகோணமலையில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

பொங்கு தமிழ் நிகழ்வையொட்டி திருகோணமலை நகர் எங்கும் சிவப்பு மஞ்சள்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு சந்திகள் மற்றும் முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் நாட்டப்பட்டு இருந்ததுடன், கேந்திர நிலையங்கள் மற்றும் விழா மைதானப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 35அடி உயரமான

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ் – கண்டிவீதி விரைவில் திறக்கப்படும்

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ.9 கண்டி வீதி இன்னும் சில தினங்களில் திறந்துவைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க யாழ். கண்டிவீதியை திறப்பதற்கு உரிய பூர்வாங்க வேலைகளுக்கென பிரதமரால் ஒதுக்கப்பட்ட 25 மில்லியன்ரூபா யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனிடம் வழங்கப்ட விருப்பதாகவும், இந் நிதி எழுதுமட்டுவாள் பகுதியில் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கும் வீதி திருத்துவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அரசஅதிபருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

## வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறமாட்டாது !

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் வடக் குக் கிழக்கில் எதிர்வரும் 25ந் திகதி நடைபெறமாட்டாதென்று தேர்தல் திணைக்கள வட்டாரங் கள் நம்பகமாகத் தெரிவித்துள் ளன.

இத்தேர்தல் ஒத்திவைப்பது குறித்து விசேட அறிவித்தல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் தேர்தல் திணைக்களத்தினால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்துவதற்குரிய சூழ் நிலை தற்போது இல்லை எனவும் அரசுக்கும் புலிகளிற்கும் இடையே உருவாகியுள்ள சமாதானச் சூழ்நிலைக்கு தேர்தல் பாதிப்பாக அமையும் என்றும் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரதமருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பிரதமர் தேர்தலை ஒத்திவைப்பதற்கு உரிய

(2ம் பக்கம் பார்க்க)

## 8 ஆயிரம் நிலையங்களில் இன்று வாக்களிப்பு

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு 8ஆயிரம் நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

தேர்தலில் வாக்களிப்பதற்கு 95லட்சத்து 75ஆயிரம் பேர் தகுதிபெற்றுள்ளனர். இதேவேளை 20 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (ந.5)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை "பவ்ரல்" கண்காணிக்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள போர்நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு பவ்ரல் அமைப்பு முன்வந்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் கண்காணிப்புப் பணிகள் முடிவடைந்த பின் ஏப்ரல் மாதம் முதல், தமது போர் நிறுத்தக் கண்காணிப்பு பணி ஆரம்பமாகும் என்றும், பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஆறு கண்காணிப்புக் குழுக்கள் செயற்படும். சிவில் சமூகஅமைப்பு என்ற வகையில் போர் நிறுத்த மீறல்கள் ஏதும் இடம்பெற்றால்அவை பற்றிய உண்மைகளை தமது அமைப்பு கண்டறியுமென்றும் றொட்றிக்கோ கூறினார். (இ)

## டாக்டர் கனகசபை காலமானார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கனகசபை இந்தியாவில் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 76

## சமூக விரோத செயலில் ஈடுபடுவோரை ஒரு போதும் மன்னிக்க மாட்டோம்

## புலிகளின் யாழ் மாவட்டப் பிரிவு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனிதமான எமது விடுதலை இயக்கத்திற்குக்களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில தீயசக்திகள் செயற்படுகின்றன. இது விடயத்தில் பொதுமக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்டப் பிரிவுவிடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்பிற்கினிய மக்களுக்கு என விடுக்கப்பட்டுள்ள அத் துண்டுப்பிரசுரத்தின் விடயம் வருமாறு:-

அன்பிற்கினிய் மக்களுக்கு!

இன்று மலர்ந்துள்ள சமாதான "புரிந்துணர்வு" உடன்படிக்கையைக் குழப்புவதன் ஊடாக எமது புனிதமான இயக்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்குடன் சில தீய சக்திகள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. இந்தப் புல்லுருவிகளின் கபடத்தனமான செயற்பாடுகள் தொடர்பாக எமது மக்களை விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

எல்லையற்ற தியாகங்கள் , அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட இந்த விடுதலைப்போராட்டம் இன்று பெரு வளர்ச்சிகண்டு மக்கள் போராட்டமாக எழுச்சி கண்டுள்ளது. இதன் ஒருவடிவம் தான் அண்மைக்காலங்களில் நடைபெற்று வருகின்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் ஆகும். எமது மக்களின் இந்த விடுதலை உணர்வைத் திசைதிருப்பும் நோக்குடன் இச் சமூகவிரோத சக்திகள் ஆபாசப் படங்களின் ஒளி நாடாக்களை விநியோகித்தல் மற்றும் காண்பித்தல், போன்றதிட்டமிட்ட

(2ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### கைபிருப்பு கொஞ்சந்தான்!

வியாழ, சனீஸ்வர, இராகு கேது மாற்றப் பலாபலன்கள் உங்களுக்கு எப்படி? மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற வழி காட்டும் 'மொழித்திறன்' 'ஆங்கிலத்தில் கட்டுரைகள்' 'அழகியல் (தரம் 1-5 வரை) பூபாலசிங்கம் உட்பட எங்கும் விற்பனை V. A. சிவராசா- ஆனந்தி வெளியீடு என்று மறக்காது கேளுங்கள்.

(4856)

### மணமகன் தேவை

கௌரவ இந்துக் குலத்தைச்சேர்ந்த 1963 ல் பிறந்த 7 ல் செவ்வாய் கிரக தோஷம் கூடிய பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் தேவை விரும்பியவர்கள் ஜாதகத்துடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல-239 மே பா வலம்புரி:- யாழ்ப்பாணம். (சி-3734)

### தேவை

மண்டைதீவில் உள்ள சைவ ஆலயம் ஒன்றிற்கு நித்திய பூஜைகள் செய்வதற்கு அந்தணர் ஒருவர் அவசரம் தேவை குடும்பஸ்தருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசி முடிவுஎடுக்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-240, மே/பா, வலம்புரி:- யாழ்ப்பாணம். (4858)

## இராசி பலன்

20.3 2002
(பங்குனி ,6, புதன்)
சஷ்டி பி.ப 3.47 வரை
ரோகிணி பி.இ 1.55 வரை
ராகு காலம் -12 18 - 1.48
நல்ல நேரம் 4 48- 6.18
சஷ்டி விரதம்

**மேடம்**
நிலைக்கேடு, முயற்சிதாமதம், மாதர் உதவி, போசன சுகம்.

**இடபம்**
நண்பர்கள் உதவி, போசன சுகம், புதிய பொருள் சேர்க்கை, முயற்சி ஜெயம்.

**மிதுனம்**
தொழில் விருத்தி, திடீர் நன்மை, உணர்ச்சிவசப்படல் தனவிரயம்.

**கடகம்**
குடும்பசுகம், காரியசித்தி தனலாபம், தொழில்சிந்தை.

**சிங்கம்**
பிறர்உதவி, அதிகபிரயாசை, தூரதேசச்செய்தி, முயற்சி கைகூடும்.

**கன்னி**
தொழில் கஷ்டம், ஆன்றோர்பதிப்பு, பிரயாணம், உடல்நலக்குறைவு.

**துலாம்**
தேவையற்ற மனஸ்தாபம் கடன்தொல்லை, முயற்சி தடங்கல், தொழில்நன்மை.

**விருச்சிகம்**
சுவாரஸ்யம், அபூர்வ சந்திப்பு, காரியம் கைகூடும், சத்துரு ஜெயம்.

**தனுசு**
காரியஅனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, தேகசுகம், இலட்சுமீகரம்.

**மகரம்**
வியாபார நன்மை, பிரயாணத்தடங்கல், கௌரவக் குறைவு, காரியதாமதம்.

**கும்பம்**
சகோதரர் உதவி, மனப்பதற்றம், அற்பர்உறவு, முயற்சிதாமதம்.

**மீனம்**
காரியஜெயம், இனிய சம்பவம், தனலாபம், அன்னியர் சந்திப்பு.

(பழையநேரப்படிகணிப்பிடப்பட்டது

**வளவன்**

### உள்ளூராட்சி

ஏற்பாட்டை செய்வதாக உறுதியளித்திருந்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தலைமையில் மாநாடு இடம்பெற்றுள்ளது

இம் மாநாட்டில் முப்படைத்தளபதிகள் கூட்டுப்படைத் தளபதி றொகான் தளுவத்த மற்றும் வடக்கு கிழக்கு மாகாண அரச அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

தேர்தல் நடத்துவதற்கு உரிய சூழ்நிலை வடக்குகிழக்கில் தற்பொழுது இல்லையெனவும் புரிந்துணர்வு உடன்படிக்கையையும் சமாதான முயற்சிகளையும் தேர்தல் பாதிக்குமெனவும் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது

இதனையடுத்து இவ் விடயம் குறித்து இறுதி முடிவை வெளியிட தேர்தல் ஆணையாளர் இன்றுசட்டமா அதிபரைச் சந்தித்து பேச்சுநடத்தவுள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவாக்காளர் அட்டைகளும் வடக்குகிழக்கில் விநியோகிக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது(இ

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

கலைப்பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

**இரண்டாம் மொழி ஆங்கில மீள் பரீட்சைகள் 2002**

கலைப்பீட (கலைப்பீட மாணவர்கள், இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் ) மற்றும் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர்களுக்கு மான இரண்டாம் மொழி ஆங்கில மீள் பரீட்சைகளான ESL Level I, Level II, Level III ற்கான விண்ணப்பங்கள் பொருத்தமான மாணவர்களிடமிருந்து 19. 04. 2002 திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50வீதம் பல்கலைக் கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தத்தமது பீடத்தின், பீடாதிபதி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

விண்ணப்பப் படிவங்களை 20-03-2002 திகதியிலிருந்து தத்தமது பீடங்களின் பீடாதிபதி அலுவலகங்களிலிருந்து சுய விலாசம்இடப் பட்டமுத்திரைஒட்டப்பட்டதபால் உறையை இணைத்து தத்தமது பீடங்களின் உதவி பதிவாளருக்கு அனுப்புவதன் மூலம் வவுனியா வளாகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி மீள் பரீட்சைகள் 29-04-2002, 30 -04 - 2002, 02 - 05- 2002 ஆகிய திகதிகளில் யாழ். பல்கலைக்கழகம், வவுனியா வளாகம்ஆகிய இடங்களில் நடைபெறும்.

பதிவாளர்.
19-03-2002.
(சி - 3733)

### பங்குனி உத்தர இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலயத்தில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனை கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்த லட்சார்ச்சனை இறுதித்தினமான 10ம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகத்துடன் சிவகாமி அம்பாள் வள்ளிதெய்வானை சகிதம் முருகப்பெருமான் பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார். (வ)

### சமூகவிரோத

நடவடிக்கைகளினூடாக கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். அத்துடன் எமது புனிதமானஇயக்கத்தின் பெயரைப் பயன் படுத்தி வரி வசூலித்தல், கப்பம் கேட்டல் ஆயுத முனையில் எமது மக்களை அச்சுறுத்தி திருட்டுத்தனமான செயல்களில் ஈடுபடல் போன்றசெயல்களில்ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் தீய சக்திகளை எமது இயக்கம் ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை. எனவே இவ்விடயம் தொடர்பாக எமது மக்களை மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (வ)

## தேர்தல்கள் திணைக்களம்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்2002
வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றி சுருக்கமான விளக்கம்

வாக்குச் சீட்டின்

### மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| 'அ' கட்சி | இலச்சினை | |
| 'ஆ' கட்சி | இலச்சினை | |
| 'இ' கட்சி | இலச்சினை | |
| சுயேட்சைக்குழு 1 | இலச்சினை | |
| சுயேச்சைக்குழு 2 | இலச்சினை | |
| சுயேச்சைக்குழு 3 | இலச்சினை | |
| 1. | 11. | |
| 2. | 12. | |
| 3. | 13. | |
| 4. | 14. | |
| 5. | 15. | |
| 6. | 16. | |
| 7. | 17. | |
| 8. | 18. | |
| 9. | 19. | |
| 10. | 20. | |

01. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

02. போட்டியிடும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில்ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டில் ''புள்ளடி'' (X) யிடல் வேண்டும்.

03. வாக்குச்சீட்டின் கீழேயுள்ள பகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தைக் கொண்ட கூடொன்றும் அதற்கு வலது பக்கத்தில் வெற்றுக் கூடுகள் இரண்டும் உள்ளன. இலக்கத்தினைக் கொண்ட கூட்டில் போன்றே வலது பக்கத்தில் உள்ள வெற்றுக் கூடுகளில் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள் விருப்புகளுக்காக (X) என்ற ''புள்ளடியை'' இடலாம். வேண்டுமானால் மூன்று விருப்பு வாக்குகளையும்ஒரு வேட்பாளருக்கு அல்லது இரண்டு விருப்புகளை ஒருவருக்கும் ஒரு விருப்பை இன்னொருவருக்கும் அல்லது மூன்று விருப்புக்களை மூன்று வெவ்வேறான வேட்பாளர்களுக்குப் பகிர்ந்தும் அடையாளஞ் செய்யலாம்.

04. வாக்கொன்று அடையாளமிடாது விருப்புகள் மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும்படும். ஆகையினால் முதலில் நீங்கள் விரும்பும் ஒரு கட்சியின் அல்லது குழுவின் சின்னத்திற்கெதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் (X) புள்ளடியிட்டு வாக்கை அடையாளமிட்டு அதன்பின் விருப்பமாயின் விருப்புகளை அடையாளமிடுவதே பொருத்தமானது என்பதை தயவுகூர்ந்து நினைவிற்கொள்ளவும்.

தயானந்த திசநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்,
தேர்தல்கள் செயலகம்,
சரணமாவத்தை, இராஜகிரிய,
ஸ்ரீஜெயவர்தனபுர,
2002 மார்ச் மாதம் 10 ஆந் திகதி
(கி-3731)

### ஏமாற்றிப் பணம் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏமாற்றிப் பணம் பறிக்கும் குழுக்களின கொட்டம் சில காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ளது.

இந்தவகையில் அண்மையில் வடலிபடைப்பு இறம்பன் கோவிலடிப் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் மனைவியிடம், அவரது கணவர் ஆயிரம் ரூபா வாங்குமாறு கூறியதாகத் தெரிவித்து பணத்தைப்பெற்றுக்கொண்டு சென்று விட்டதாக தெரிய வந்துள்ளது. (உ-124)

### தமிழீழ விடுதலை

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு இந்தியா அங்கு இடமளிக்க வேண்டும். இந்தியா எமக்கு அண்டை நாடாகஇருப்பதால் இந்தவிடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

தமிழீழக் கோரிக்கைக்கு சமமானதீர்வு வரும் வரை விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடமாட்டார்கள்என்றும் கரிகாலன் கூறினார்.

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் படுகொலை சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விக்கு கரிகாலன் பதில் அளிக்கையில்,

இந்திய அமைதிப்படைவடக்குக் கிழக்கில் இருந்த போது தமிழ்மக்கள் சந்தித்த அழிவுகளுடன் ஒப்பிடும் போது ராஜிவ்காந்தியின் மறைவு அவ்வளவு பெரிதல்ல அது மிகவும் குறைவானதென்று கூறினார். (வ)

### பொங்குதமிழ் .

கட்டவுட் நிறுத்தப்பட்டு ஒலிபெருக்கிகளில் களத்தில் கேட்கும் கானங்களும், விடுதலைக் கீதங்களும் இசைக்கவிடப்பட்டு நகரம் பெரும் விழாககோலம் பூண்டிருந்தது.

உணர்வு பூர்வமாக நிகழ்வில் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு அம்பாறை வன்னி மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளிலிருந்து திருகோணமலைக்கு வந்த சுமார் 50ஆயிரத்துக்கு மதிகமான மக்கள் திருமலையின் பல நகரங்களிலிருந்தும் பேரணியாகப் புறப்பட்டு முற்றவெளி மைதானத்தை முற்பகல் 10.45 மணிக்கு வந்தடைந்தனர்.

அலைகடல் என திரண்டு வந்திருந்த மக்கள் வெள்ளத்தினால் நிரம்பிவழிந்த முற்றவெளி மைதானத்தில் எழுச்சி நிகழ்வுகள் முற்பகல் 11மணிக்கு எஸ். ஜீவராஜ் தலைமையில் ஆரம்பமானது.

ஈகச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதும்நிகழ்வில்கலந்துகொண்ட சிறப்பு அதிதிகளான தமிழ் கூட்டமைப்பு யாழ் மாவட்ட எம்.பிகள் எம். கே. சிவாஜிலிங்கம், என். ரவிராஜ், அ. விநாயகமூர்த்தி, திருமலைப் பல்கலைக்கழகப் பிரதிநிதி எஸ். பிரசாந், மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பீ.சந்திரசேகரன் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் எம்,பியுமான இராசம்பந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நண்பகல் 12.30 மணியளவில் பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்பட்டதையடுத்து எழுச்சி நிகழ்வுகள் நிறைவுபெற்றது.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்ற பொங்கு தமிழ் எழுச்சிப்பிரவாகம் மீண்டும் மற்றொரு தடவை யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு ஆரிய குளத்தடியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க தலைவர் அறிவித்துள்ளார். (உ-3)

● ● ●

(ஊர்காவற்றுறை)

வேலணைத் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகப் பொதுக்கூட்டம் நாளை பி.ப 3.00 மணிக்குவேலணை ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர். மு. சிவனேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-75)

● ● ●

(ஊர்காவற்றுறை)

வேலணைத்துறையூர் ஐயனார் வித்தியாலயப் பழைய மாணவர் சங்கப் பொதுச்கூட்டம் நாளை மறுதினம்வெள்ளிக்கிழமைபி.ப.5 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-75)

### கட்டடக் கலை
## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கட்டடக் கலை பணிகளும் அம்சங்களும், சூழமைவுப்படுத்தலும் எனும் தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணி முதல் பி.ப.4.30 மணிவரை ஐந்து அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஏற்பாட்டில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் பார்வையாளர்களாக எவரும் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## எரிபொருள்
### களஞ்சியத்திற்கு புதிய பவுஸர்கள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன காங்கேசன் துறை எரிபொருள்களஞ்சியத்திற்கு இரண்டு பெரியபவுஸர்கள் அண்மையில் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த பவுஸர்களில் 13 ஆயிரத்து 200 லீற்றர் எரிபொருளை எடுத்துச் செல்லலாம் என்று மேற்படி களஞ்சிய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (எ-232)

## மின்சாரம் இல்லை

(காரைநகர்)

காரைநகர் கிழக்கு களபூமி பகுதிக்கு இதுவரைமின்சாரம் வழங்கப்படவில்லை.

1996 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அதிகமான மக்கள் இங்கு மீளக்குடியமர்ந்த போதும், இன்றுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி இருளில் மூழ்கியிருப்பதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் பாதிக்கப்படுவதாகவும்பொது மக்கள் கவலைதெரிவித்துள்ளனர். (உ-246)

## யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்தைப் பார்வையிடவென விமலதர்ம பிறதர்ஸ்கம்பனியைச்சேர்ந்த மூவர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மேற்படி கோபுரத்தில் பிரிட்டன் அரசு வழங்கிய மணிக்கூட்டினைப் பொருத்துவதுதொடர்பாக இவர்கள் ஆராயவுள்ளனர். (உ-19)

### சிங்களத் தேசியஇனம்
# தமிழினத்தின் உண்மையான நிலைப்பாட்டை அறிய புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கிறது
### அவையில் கஜேந்திரகுமார் எம். பி.

(கொழும்பு)

தமிழ்த் தேசிய இனத்தின் உண்மையான நிலைப்பாட்டைச் சிங்கள தேசியஇனம் அறிந்துகொள்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கிறது. இதை சிங்களத்தேசிய இனம் புரிந்து கொள்ள விரும்புகிறதா என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாகும். இக்கேள்விக்கான பதிலை நாம் அறிவதற்கு ஆவலாகக்காத்திருக்கிறோம்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய ஒத்திவைப்பு விவாதத்தின்போது உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது;

இந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையை இச்சபையில் கேள்விக்குட்படுத்துகின்ற அதே உறுப்பினர்கள் கடந்த இரு பாராளுமன்றங்களின் ஆயுட்காலத்தில் சமாதானத்தின் காவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய இனமும் அதன் உண்மையான பிரதிநிதிகளுமே பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக உள்ளனர் என்ற பிரசாரத்திற்குத் தலைமை தாங்கிய இச்சபையின் அதே உறுப்பினர்கள் தான் இன்று வல்லூறுகளாக சமாதானத்தைக் கவிழ்ப்பதற்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று மீண்டும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர். இது சமாதானத்திற்கான இறுதிவாய்ப்பு என்று பிரதம மந்திரி குறிப்பிட்டார், உண்மையில் இது கடைசிவாய்ப்பே.

இக்கடைசி வாய்ப்பை இந்நாட்டு மக்கள் பற்றிக் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் குரல் இன்று ஒன்றுபட்டதாக உள்ளது.

உயிர்கள் பணயம் வைக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் அரசியல் சூதாட்டங்களுக்கு இடமில்லை என்ற உண்மையை நாம் உணர்ந்துள்ளோம்.

எமது அணுகுமுறை சிங்களத் தலைமைத்துவத்திற்குத் தெளிவான சமிக்ஞைகளை அனுப்பவேண்டும் என்பது எமது விருப்பமாகும்.

இந்த அரசு சரியானதைப் பிழையிலிருந்து வேறுபடுத்துவதற்கான விவேகத்தைப் பெற்றுக்கொள்ளட்டும் என்று குறிப்பிட்டார். (எ)

### கூட்டுறவு மொத்த
## விற்பனை நிலையங்கள் வன்னியில் விரைவில் திறப்பு

(கிளிநொச்சி)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிகளான கிளிநொச்சி, மல்லாவி, பரந்தன் ஆகிய பகுதிகளில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஏப்பிரல் மாதம் 4ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவிகருணாநாயக்கா தெரிவித்துள்ளனர்.

வெலிசறையில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கறுப்புச் சந்தையைஒழித்து மக்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் சென்றடைவதற்கு வழி வகுக்கவே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் திறக்கப்படவுள்ளதுஎன்றும்அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வன்னி மக்கள் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்காகவே அங்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (வ)

### மக்கள் வங்கிக் கிளைகளை
## கணனி மயப்படுத்தும் நடவடிக்கை துரிதம்

(மண்டைதீவு)

அரசின் நூறு நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கி கிளைகளை நவீன மயப்படுத்தும் நடவடிக்கையாழ் .மாவட்டத்தில் மும்முரமாக இடம் பெற்று வருகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த மக்கள் வங்கியின் மூத்த அதிகாரிகள் குழுவின் பணிப்புரைகளுக்கு அமைவாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கிளை, யாழ்.பிரதான வீதி கிளை, கன்னாதிட்டிக் கிளை, சுன்னாகம் கிளை, பல்கலைக்கழக கிளை என்பன முதல் கட்டமாக கணனிமயப் படுத்தப்படவுள்ளன.

இக் கிளைகளுக்கு கணனி வழங்கும் வைபவம் எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில், பிரதிப் பொது முகாமையாளர் எஸ். இளம் பிறைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-11)

## பாடசாலைகளுக்கு கணனிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி, மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட கணனிகள், தையல் இயந்திரங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியன நேற்றுமுன் தினம் யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை தேசியப் பாடசாலைகளுக்கு நேரடியாகவும், ஏனைய பாடசாலைகளுக்கு வலயக்கல்விப் பணிமனைகளூடாகவும் வழங்கப்படவுள்ளன.

விநியோகப் பணி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. (உ-19)

## ஐரோப்பிய நாடுகள் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்
### அமைச்சர் மெலிந்த மொறகொட கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய சமூகம் ஆக்கபூர்வமான அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவை வழங்க வேண்டும் என பொருளாதாரசீர்திருத்த அமைச்சர் மெலிந்த மொறகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொண்டு கடந்த வாரம் சென்ற போதே அவர் இக் கோரிக்கையினை விடுத்திருந்தார்.

ஐரோப்பிய நாடுகள் வழங்கும் உதவிகள் இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஐரோப்பிய சமூகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் பற்றி தாம் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்தப்போவதாகவும் ஐரோப்பிய சமூக நாடுகள் உறுதி தெரிவித்துள்ளன. (செ)

### பாடசாலைகள்
## இன்று மூடப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் பிரதேசங்களில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்பட்டிருக்கும்.

அத்துடன், வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் அனைத்தும் நேற்று நண்பகல் 12. 00 மணியுடன் மூடப்பட்டன.

இதேவேளை, வாக்குகளை எண்ணுவதற்காக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் நாளை வரை மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் சங்காபிஷேகம் இன்று புதன் கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைதொடர்ந்துசுவாமி வீதியுலா வரும் காட்சியும், சமய சொற்பொழிவுகள் என்பனவும் இடம் பெறும். (உ-9)

# விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் பாடசாலைகளில் நடைபெறாது
### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க பொதுப் பரீட்சைகளுக்கான விடைத்தாள் திருத்தும் நிலையங்களாக பாடசாலைகளை பயன்படுத்துவதில்லையென இலங்கைபரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக ஆணையாளர்நாயகம் ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிகள் பாடசாலைகளில் இடம்பெறுவதால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்படைவதாக மாணவர்களது பெற்றோர் கல்வியமைச்சர் கருணாசேனகொடித்துவக்கின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்தேஇந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் அரசாங்கத்தின் ஏனையதிணைக்கள கட்டடங்களில் நடைபெறுமெனவும், யாழ்ப்பாணம், அம்பாறை, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் விடைத்தாள்கள் திருத்தும் நிலையங்கள் ஏற்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உ-5)

# நிரந்தர சமாதானம் நிலைபெற பிரார்த்தனையில் ஈடுபடுக!

## பெபரல் அமைப்பு அனைவரிடமும் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கில் தொடரும் யுத்தத்திற்கு முடிவுகட்டப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இதற்கான முயற்சிகள் வெற்றியளித்து நிரந்தர சமாதானம் நிலைபெற அனைவரும் பிரார்த்தனை புரிய வேண்டும். அதற்காக வழிபாடுகளை நடத்த வேண்டும் என்று சமாதானத்திற்கான பிரஜைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பாக கடந்த சனியன்று மேற்படி அமைப்பு செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய போது பெபரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்டிக்கோ மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

இவ்வமைப்பில் தேசிய ரீதியில் பலம்பெற்ற சமாதானத்துக்கும் சகவாழ்வுக்குமான அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் உட்பட 60 அமைப்புக்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# அரியாலை ச ச நிலையம் செயற்படும்

(அரியாலை)

புங்கங்குள வீதியில் அமைந்துள்ள அரியாலை சனசமூக நிலையம் 7வருடங்களின் பின்னர் எதிர்வரும் 28 ஆம் திகதி இயங்கவுள்ளது.

சூரியக்கதிர்-1 இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவத்தினர் வசமிருந்த மேற்படி சனசமூக நிலையப் பகுதி, அண்மையில் சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பித்தக்கது. (உ-225)

# மக்கள் வங்கி கருமபீடம் திறப்பு

(மண்டைதீவு)

மக்கள்வங்கியின், யாழ். பல்கலைக்கழக கிளையின் நீடித்த கருமபீடம்எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை திருநெல்வேலி புதிய சந்தையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கருமபீடத்தைத் திறந்து வைப்பார். (உ-11)

# கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச்சபை நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றுபி.ப. 3. 30 மணிக்கு.

யாழ்ப்பாணம் பசன். எஸ், சி. வி. க எதிர் இருபாலை வானவில் வி. க. ஆகியன கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# பேருந்து விபத்தில் எண்மர் பலி

(அம்ஸ்டர்டாம்)

நெதர்லாந்தில் உல்லாசப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று பாரவூர்தி ஒன்றுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் எட்டுப்பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். இருபத்தியேழுபேர் காயமடைந்துள்ளனர்.

பாரவூர்தி கட்டுப்பட்டை இழந்ததிலேயே உல்லாசப் பயணிகளின் பேருந்துடன் மோதியுள்ளது. (செ)

# படையினரை வெளியேற கோரிக்கை

(துன்னாலை)

வரணி கரம்பைக்குறிச்சி திக்கில் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வீடுகளில் தங்கியுள்ள படையினரை வெளியேற்றி தாம் மீளக்குடியமர ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் இராணுவ அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-41)

# குருபூஜை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 21 வதுஆண்டுகுரு பூஜை ஆராதனை விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிமுதல் குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மதியம் மகேசுர பூசையும் மாலை கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (உ-226, 124)

# சமுர்த்தித் திட்டங்களுக்கு அடுத்த ஆண்டு புத்துயிர்

## அமைச்சர் திஸநாயக்க

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கென்றேஆரம்பிக்கப்பட்ட சமுர்த்திதிட்டம் இன்று அரசியல்மயமாகி விட்டதுஎனசமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகாரிகளின் அரசியல் நடவடிக்கைகள் யாவும் நாட்டின் வறுமை ஒழிக்கும் நடவடிக்கைகளாகவும், திட்டங்களாகவும் இருக்க வேண்டுமே தவிர அரசியல் ரீதியான சுய தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்களாக அமையக் கூடாது.

அடுத்த ஆண்டில் சமுர்த்தித் திட்டங்கள்யாவற்றுக்கும் புத்துயிர் ஊட்டும் ஆண்டாக திட்டமிடப்படுவதுடன், இருப்பிட வசதிகள் இல்லாத, சமுர்த்தி உதவிகள் பெறுவோருக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# காவலிலுள்ள கைதிகள் விரைவில் விடுதலையாவர்

## அரச சட்டத்தரணி உறுதி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல கைதிகளையும் விடுதலை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச சட்டத்தரணி றியாஸ் ஹம்ஷா உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனிதவுரிமை மீறல் மனுக்கள் இரண்டு விசாரணைக்குஎடுக்கப்பட்டபோதே அரச சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளான மார்க்பெனாண்டோ, பி. எதிரிசூரிய, சி. வி. விக்கினேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற இந்த விசாரணையில்,

அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்தவர்களான ரி. கிருஷாந்தன், ஆர். அருளாநந்தன் ஆகிய இருவரதும் அடிப்படை மனிதவுரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்த நீதிமன்றம் இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (உ-5)

# அனுமதியின்றி பால்மா விளம்பரம் செய்தால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உணவு ஆலோசனைக் குழுவின் அனுமதியின்றி பால்மா விளம்பரங்கள் ஊடகங்களில் வெளியிடப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாகவிளம்பரம்செய்யப்படுவதால் உணவுச்சட்டங்களின் பிரமாணம் மீறப்படுவதுடன், பொதுமக்களைத்தவறான வழியில் வழி நடத்தியும் வருகின்றன என உணவு ஆலோசனைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

உணவு ஆலோசனைக் குழுவின் அனுமதியின்றிவிளம்பரம் செய்யும் கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக ஊடகப் பிரதிநிதிகளின்கூட்டமொன்றைநடத்த உத்தேசித்து இருப்பதாக சுகாதார திணைக்களத்தின்உணவு ஆலோசனைக்குழு தெரிவித்திருக்கின்றது. (உ-8)

## சுகாதாரக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதாரக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. (உ-19)

## ஆரியரத்னா வீடு மீது தாக்கு

# இராவணா படையே காரணமென கண்டறிவு

(கொழும்பு)

சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. ரி ஆரியரத்னாவின் இல்லம் மீது சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலுக்கு 'இராவணா படை' என்னும் அமைப்பே பொறுப்பாகும் என விசாரணைகளை நடத்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தாக்குதல் நடத்திய படை, எச்சரிக்கை குறிப்பொன்றைப் போட்டுச் சென்றுள்ளதாகவும்,

அதில் தேசிய ஜாதிய பாவாதுன்னடி தண்டுவம- தேசிய இனத்தைக்காட்டிக் கொடுத்தமைக்குத் தண்டனை எனவும் கீழே இராவணா படை என குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது.

சமாதானத்திற்கு ஆதரவாகச்செயற்பட்டதாலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

# காரைநகரில் கடற்றொழில் வங்கி

(காரைநகர்)

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கடற்தொழில் வங்கியாக்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில்பிரிசோதகரால் அண்மையில் நடந்த ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழில் சங்க கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் சங்கங்களின் அங்கத்தவர் சேமம்40 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்டும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தின் அறிக்கையும், சுழற்சி முறைக்கடன் நடவடிக்கையும் சிறப்பான முறையில் அமைந்ததால் கடற்றொழில் வங்கியாகக் கூடிய தகுதியை அடைந்துள்ளது.

வங்கிக்கட்டடம் அமைக்கும் நிதியாக கடற்றொழில் திணைக்களத்தினால் 12 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-246)

## பழம் பதனிடல்

# செய்முறைப் பரீட்சை

(நவக்கிரி)

'பழம் பதனிடல்' பயிற்சி நெறி முதலாம் கட்டஅபிவிருத்திதொண்டர்களுக்கான செய்முறைப் பரீட்சை நாளை நடைபெறவுள்ளதால் அனைத்து பரீட்சார்த்திகளையும் காலை 8.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-233)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்கானை கிழக்கு விக்கினேஸ்வர வித்தியசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி ப. 2.00 மணிக்கு மகாதேவப் பிள்ளையார் கோயில் அருகாமையில் அதிபர் திருமதி ச. ஸ்ரீபிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. தனபால சிங்கமும் சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் வ. குகவேளும், கௌரவ விருந்தினராககிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் த. தர்மலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# மீளக்குடியமர்ந்த மக்கள் நிவாரணம்பெற அலைச்சல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையிலும் அவர்களுக்கான உலர்உணவு நிவாரணம், முன்பு இடம் பெயர்ந்து தங்கியிருந்தபோது வழங்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களூடாகவே வழங்கப்படுவதாக தெரியவருகிறது.

இதனால், மீளக்குடியமர்ந்த மக்கள் அலைச்சல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதேவேளை, தென்மராட்சிப் பகுதி ப. நோ.கூ. சங்கங்கள் பலவும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-124)

## சமாதான முயற்சிகளின் மத்தியிலும்

# புலனாய்வு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டுள்ளோம்

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்ற போதும், மறுபுறம் புலனாய்வுப்பிரிவை நன்றாக அபிவிருத்தி செய்து விழிப்பாக வைத்திருக்கின்றோம்.

அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும்போது உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது,

இன்றுநாம் மக்கள்மீதான கெடுபிடிகளை நீக்கியுள்ளோம் என்பதற்காகவும், வீதித் தடைகளையும் அகற்றியுள்ளோம் என்பதற்காகவும் பலர் எம்மைக் குற்றம்சாட்டுகின்றனர்.

ஆனால் நாம் எப்போதும் எதைப்பற்றியும் விழிப்பாகவே உள்ளோம்.

முன்புபோன்று சோதனைகள் நடத்திமக்களைத் தொல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாதபோதும்,

இரகசியமாக திரைமறைவில் புலனாய்வு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றோம்.

மக்கள்மீதான தடைகளை நூறுவீதமாக தளர்த்திவிடவும்இல்லை என்று குறிப்பிட்டார். (உ)

## மேலைத்தேய வாத்திய கருவிகள் கொள்வனவு

(இணுவில்)

இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு, லண்டன், கனடாக் கிளையினரின் அன்பளிப்பு நிதிமூலம் மேற்படி பாடசாலைக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (உ-79)

## இன்று ஒரு தகவல்

# அசுவகந்தி (அமுக்கரா)

அசுவகந்தி மலைச்சாரல்களிலும், பேட்டுப்பாங்கான சமவெளிகளிலும், வட இந்தியாவின் தென்மேற்குப் பகுதியிலும் ஏராளமாகப் பயிராகிறது. மத்திய இந்தியாவில் அதிகமாகக் காணப்படுகிறது. காடுகளில் குத்துச் செடி இனமாக வளரும். மூலிகைப் பண்ணைகளில் வளர்க்கப்படுகிறது. அசுவகந்தம், அஸ்வகந்தி, அமுக்குரவு அமுக்கராம் கிழங்கு, அசுவம், இருளிச் செவி, கிடிச்செவி, வராககர்ணி, என்று வேறு பெயர்களாலும் இது வழங்கப்படுகிறது. இலை, வேர்களில் கிழங்கு போல் விட்டு வளரும் பாகங்கள் பயன்படும் உறுப்புகளாகும்.

சிறு கிளைகள் சொற சொறப்பாகவும், மயிர் தூவிகள் உறைபோல் அடர்த்தியாக அக்கிளைகளைச் சுற்றியும் இருக்கும். காகிதம் போன்ற இலைகள் முட்டை வடிவிலோ அல்லது நீண்ட முட்டை வடிவிலோ இருக்கும். இலைகளில் பக்கவாட்டில் 6-8 ஜதை நரம்புகள் இருக்கும். இலைகளிலும் மென்மையான தூவிகள் காணப்படும். இலையின் கீழ்ப்பகுதி குறுகலாக கூர்மையாக இருக்கும். புல்லிவட்டம் மணிவடிவத்தில் இருக்கும். வெளிப்புறம் சிறு சிறு மயிர்கள் காணப்படும். மடல்கள் ஐந்து ஈட்டி வடிவமானது. கூர்மையானது. அல்லிவட்டம் மஞ்சள் நிறம். குறுகிய மணிவடிவானது. மடல்கள் ஐந்து. முக்கோண வடிவமானது. அகலம் குறைவாக நீண்டு இருக்கும். ஒன்றையொன்று மடல்கள் சந்திக்கும். ஆனால் ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்திருக்காது. அடிப்பகுதியில் சேர்ந்திருக்கும் வெளிப்புறம் மயிர்கள் உண்டு. மகரந்தக் கேசரங்கள் ஐந்து வெளிப்புறமாக அமைந்திருக்கும். மகரந்தப்பை நீண்டிருக்கும், கிழக்கு மேற்காக வெடிக்கும்.

இதன் கனி உருண்டையானது பெரிய வகையைச் சேர்ந்தது. அதன் மேல் வளருந்தன்மையுள்ள புல்லி கலசமாக அமையும். விதைகள் வட்டமாக தட்டையாக இருக்கும். முக்கோணம் மாதிரி இருக்கும் விதையுறை குழிகள் உடையது. வெப்பகற்றியாகவும், சிறுநீர் பெருக்கியாகவும் செயல்படும். உடல்தேற்றியாசவும், ஆண்மைப்பெருக்கியாசவும் உபயோகப்படக்கூடியது. இது ஒரு சிறந்த வீக்கமுருக்கி. உடலை உரமாக்கி உறக்கமுண்டாக்கும் செய்கைகளையும் உடையது.

அமுக்கராங்கிழங்கை சித்த மருத்துவத்தில் அதிகமாக உபயோகிப்பார்கள். வாத சம்பந்தமான நோய்களுக்கும் நரம்புத் தளர்ச்சியுள்ள நோய்களிலும், உடலிற்கு ஊட்டத்தைத் தரவும், ஆண்மையைப் பெருக்கச் செய்யவும் பயன்படும் மருந்துகளில் இது முக்கியமானது. உடல் மெலிவுற்று நலிந்திருக்கும் காலத்தில் இதிலிருந்து செய்யப்படும் அமுக்கரா லேகியம் அல்லது அஸ்வசுந்தி லேகியத்தை உட்கொள்ள நல்ல பயன் உண்டாகும். நரம்புத் தளர்ச்சியால் ஏற்பட்ட நோய்களுக்கு அமுக்கரா கிழங்கு பொடி 1 கிராம்-கல்கண்டு 3 கிராம் அளவில் காலை, மாலை உட்கொள்ள நல்லபலன் தரும்.

இக்கிழங்கை சுக்குடன் சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்து வீக்கங்களுக்குப் போட அது குறையும். இதன் கிழங்குடன் பசுவின் நீர் விட்டுக் கொதிக்க வைத்து கட்டி, கழலை, வலி, வீக்கம் இவைகளுக்கு அந்நீரை ஒற்றடம் இடலாம். குணம் தெரியும். அமுக்கராக்கிழங்கை பொடி மற்றும் நெய் முதலியன செய்து தொடர்ந்துபயன்படுத்தி வந்தால் உடலுறுதி, உடல்வனப்பு, நீண்ட ஆயுள் முதலியன உண்டாகும். அமுக்கராக் கிழங்கைப்பாலில் வேகவைத்து கழுவி உலர்த்தி பொடி செய்து, ஒருவேளைக்கு 2 முதல் 4 கிராம் வரை தேனில் கலந்து உண்டு வந்தால் உடல் வீக்கம் பசியின்மை, மூட்டுவலி உடல் பருமன் இவை நீங்கும்.

அமுக்கரா கிழங்கு உடல் சத்துக்கும், ஊட்டச் சத்துக்கும் மிகச்சிறப்புடைய மூலிகை. நவீன ஆய்வகங்களில் அமுக்கராவை ஆய்வு செய்ததில் 40க்கும் மேலாக இதில் சாரங்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அமுக்கரா லேகியம்சித்த வைத்தியத்தில் ஒரு சிறந்த டானிக் ஆகும். அமுக்கரா சூரணம் என்ற சித்த மருந்து உடல் இளைப்பு, பசியின்மை, குன்மம் போன்ற நோய்களில் மருத்துவர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது.

டாக்டர் இரா. கண்ணன்

## பொருத்தமான நியமனங்களை வழங்குக!

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

# பிரதமர் ரணிலுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொருத்தமான நியமனங்களை வழங்க வேண்டுமென்று யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து கடந்த 14 ந் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பிரதமர் ரணிலுக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யுத்தத்தின் விளிம்பில் பல சொல்லொணாத் துன்பங்களைசுமந்து பல்கலைக்கழகங்களில் கல்விகற்று ஏறத்தாழ நான்குவருடகாலமாக எந்த விதமான தொழில்வாய்ப்பும் இன்றி 1800 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் எமது சங்கத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து அங்கத்தவராகவுள்ளனர்.

கடந்தவருட ஆரம்பத்தில் உலக வங்கியின் உதவியுடன் வடக்கு-கிழக்குமாகாணத்தில் 3000 பேருக்கு ஆசிரியர் நியமனம்வழங்குவதற்கு அரச அனுமதியளித்து இருந்தது. இதில் 1000 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்குவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் கடந்த தைமாத ஆரம்பத்தில் நடைபெற்றது. ஆனால்இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை. மேலும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவது எனத்தீர்மானித்து ஒருவருடம் கடந்த நிலையில் நியமனங்கள் வழங்கப்படாது இருப்பது வேதனைக்குரியதாகும். எனவே பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கு-கிழக்குமாகாணங்களில் உள்ள அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் நீண்ட காலமாகநிரப்பப்படாதுள்ளபட்டதாரி நியமனங்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளைச்செய்வதுடன்மேற்குறிப்பிட்ட திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களில்பொருத்தமானபட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்டகாலத்தின்பின்வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கை நிர்வாக சேவைக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த வருடநடுப்பகுதியில் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டது. ஆனால் இதுவரை பரீட்சைமுடிவுகள் வெளியிடப்படவில்லை. எனவே அப்பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு ஆவண செய்யவேண்டும்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் கடந்த இரண்டு வருடங்களாக கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பல கற்கை நேறிக்கான கல்விச் செயற்பாடுகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. பட்டமேற்கல்வி டிப்புளோமா கற்கைநெறிக்கு பதிவு செய்த 120 பட்டதாரி மாணவர்களுக்கான பயிற்சி நெறி இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களிடம் அறிவித்தும் எதுவித பயனும் இல்லை. எனவே யாழ் பிராந்திய நிலையத்தின் கல்வி செயற்பாட்டை ஆரம்பித்து பதிவு செய்த பட்டமேற்கல்வி டிப்புளோமா கற்கைநெறியை ஆரம்பிக்க வேண்டும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கடந்த டிசம்பர் மாதம் உதவிப்பதிவாளர், உதவி நிதியாளர் பதவிக்கென போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டது. இதன் முடிவுகளை வெளியிடுமாறு கேட்டுக்கொள்வதோடு வடக்குக்-கிழக்குக்கு 3 ஆயிரம் ஆசிரியர் நியமனம்வழங்குவதற்கு கடந்த அரசின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதைத் தங்களுடைய அரசு நிறுத்தியுள்ளது. எனவே அதனை உடன் வழங்க வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## சிறுபான்மையினரின் உணர்வை

# அடக்கியதன் விளைவை இன்று அனுபவிக்கின்றனர்

## அன்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

இதேநாட்டில் சிறுபான்மையினரின் உணர்வுகளை அடக்கியதன் விளைவுதான் இன்று சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வன்னிக் காட்டுக்குள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற கடந்தகால தவறுகள் மீண்டும் இடம்பெற்றுவிடாது சிறுபான்மை இனங்களை அரவணைத்துச் செல்லக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

முஸ்லிம்கள் சிந்திய கண்ணீரும், இரத்தமும், இழப்பீடுகளும் மதிக்கப்பட்ட நிலையிலேயே சமாதான கதவுகள் தட்டப்பட வேண்டுமென அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## உயர்வகுப்பு

# மாணவர் மத்தியில் புராண படன போட்டி

(யாழ்ப்பாணம்)

சுந்தபுராணக்கலாசாரத்தை பேணும் ஒருநடவடிக்கையாக அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் பாடசாலைமாணவர் மத்தியில் புராணபடனப் போட்டியை நடத்தவுள்ளது.

தரம் 11,12,13இல் கல்வி கற்கும் இரு பாலார்க்கும் தனித்தனியே நடத்தப்படும் இப்போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ)

## ஐ.தே.மு.சாதித்தது என்ன?

# வினாவெழுப்புகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனது நூறுநாள் துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எதனையும் சாதிக்கவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனது நூறு நாள் திட்டத்தின்கீழ் பொருட்களின் விலையை குறைப்பதற்கும் நிதிகார் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆயினும் அதனை செய்வதற்கு அரசாங்கம் தவறி விட்டது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (உ(

# இத்தாலி கடற்கரையில் 175 இலங்கையர்கள் பொலிஸாரால் கைது

(றோம்)

இத்தாலி கடற்கரையில் படகு ஒன்றில் சென்று தரையிறங்கிய 175 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இத்தாலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் 20 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்டஆண்கள் என்றும் பெரிய கப்பல் ஒன்றில் வந்த இவர்கள் பின்னர் சிறிய படகுஒன்றிற்கு மாற்றப்பட்டு இத்தாலி கடற்கரையில் தரையிறங்கியதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (உ-5)

## கூட்டம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறைஉதவிஅரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களிற்கான கூட்டம்இன்று மு.ப. 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது, (உ-246)

# சொந்த இடத்தில் இயங்குகிறது

(துன்னாலை)

தென்மராட்சி-கொடிகாமம் ப.நோ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த வாரம் முதல் அங்கு சங்கநடவடிக்கைகள் சகலதும் இடம் பெற்று வருகின்றன. (உ-4)

## குடமுழுக்குத் தின சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி ஸ்ரீ சிவ ஞான வைரவர் ஆலய குடமுழுக்குத்தின சங்காபிஷேகம்இன்று புதன்கிழமை காலை 7.30மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவராமலிங்கத்தின் சிறப்புச் சொற் பொழிவும் இடம் பெறவுள்ளது. (செ)

## வேட்பாளர்களுக்கு மாநாடு

உள்ளூராட்சித் தேர்தலில் தேர்தல் சட்ட விதிகளை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களுக்கு விளக்கும் மாநாடு ஒன்று இன்றுபி.ப.2 மணிக்கு மட்டக்களப்பு அரசஅதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப் படை அதிகாரிகள், மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

**அறிந்தறிந்தும் வெளிநாட்டு ஆசை ஏன்?**

கொள்கலத்துள் செத்தோர்கள் கொடுங்கடலுக்
இரையானோர்
கூற்றன் தானும்
வெள்கிமனம் பதைபதைக்க விபத்துகளுக் காளாகி
வீழ்ந்து போனோர்
உள்ளதெலாம் இழந்துபிடி பட்டிலங்கை மீண்டு சிறை
உறைகின் றோர்கள்
அள்ளிவந்த தொன்றில்லை அறிந்தறிந்தும்
வெளிநாட்டில்
ஆசை ஏனோ?

-பழையவன்

# நேபாள படையினரின் தாக்குதலில் அறுபது தீவிரவாதிகள் பலி

(காத்மண்டு)

நேபாள மா - ஓ தீவிரவாதிகளின்முகாமை சுற்றிவளைத்த நேபாளப் படையினர் 60 தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தீவிரவாதிகளின் முகாமொன்றை திடீரெனச் சுற்றிவளைத்த படையினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலில் நூற்றுக் கணக்கான தீவிரவாதிகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசன முறையிலான முடியாட்சியைக் கவிழ்க்கும் நோக்கில் 1996 முதல் தீவிரவாதிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டுவருவதாகவும் அந்த மோதல்களில் 2 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

# சென்னையில் அடுக்கு மாடி விரைவு சாலைகள்

(சென்னை)

மலேசிய அரசின் உதவியுடன் சென்னையில் அடுக்கு மாடி விரைவு சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

மலேசிய அமைச்சர் டத்தோ சாமுவேல் தலைமையிலான குழு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து இதற்கான விவாதத்தைநடத்தினர்.

அடுக்கு மாடி விரைவு சாலைகள் துறைமுகத்துக்கு செல்வதாகவும் தாம்பரம் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

துறைமுக அபிவிருத்திபற்றியும் ஆலோசிக்கப்பட்டது என்று செல்வி ஜெயலலிதா தெரிவித்தார் (து)

# ஆப்கான் தீவிரவாதிகளை ஒடுக்க புதிதாக இராணுவ நடவடிக்கைகள்

## அமெரிக்க தளபதி தெரிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளை ஒழித்துக் கட்டுவதற்காக இன்னும் பல இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக ஆப்கானிலுள்ளஅமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆப்கானின் கிழக்குப் பகுதியில் 16 நாட்கள் இடம்பெற்ற அனகொண்டா' இராணுவ நடவடிக்கை முடிவடைந்துள்ளது எனினும், அப்பகுதியிலிருந்து பல அல்கெய்டா உறுப்பினர் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய அல்கெய்டாக்கள் மீண்டும் ஒன்று சேர்வார்களேயானால் அது தர்ம சங்கடமான நிலையினை ஏற்படுத்தும் என்றும்,

ஆப்கானின் கிழக்குமலைப் பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் நூற்றுக்கணக்கான போராளிகள் குவிந்துள்ளதாகவும், அவர்களை தேடி அழிக்கவோ அல்லது சிறைப்பிடிக்கவோ இராணுவ நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# விஷ்வஹிந்து அமைப்பின் தலைவர் உண்ணாவிரதம்

(அயோத்தி)

இந்திய அரசு விஷ்வஹிந்து பரிஷத் அமைப்பின் மீது நியாயமற்ற தடைகளை விதித்துள்ளதாகத் தெரிவித்து அதன் தலைவர் அசோக் சிங்கால் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில்ஈடுபட்டுள்ளார்.

அயோத்தியின் சர்ச்சைக்குரிய இடத்தில் மக்கள் கூடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாகஅவர் கூறியுள்ளார்.

இதேவேளை உண்ணாவிரதமிருந்து வரும்அசோக்சிங்காவின் உடல் நிலை குறித்து கவலை தெரிவித்த இந்திய பிரதமர் வாஜ்பாய் தேவை ஏற்படின் அவரை பாதுகாக்கும் பொருட்டு தடுப்புக் காவலில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துள்ளார் (உ-5)

## ஷரோன் தந்திரம் புரிகிறார்

ரமல்லாவில் இருந்து இஸ்ரேலியத் துருப்புக்களை வாபஸ் பெறுமாறு இஸ்ரேலியப் பிரதமர் ஷரோன் உத்தரவிட்டதை ஒரு தந்திர நடவடிக்கையென பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் வர்ணித்துள்ளார். (உ)

# சிம்பாவே ஜனாதிபதியாக முஹாபே பதவிப்பிரமாணம்

(கராரே)

சிம்பாவே ஜனாதிபதியாக 78 வயதான றொபேட் முஹாபே கடந்த ஞாயிறன்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த 9 ஆம் திகதி முதல் மூன்று நாட்களாக நடைபெற்றஜனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து, இவர்ஜனாதிபதியாகப்பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

எனினும் முஹாபேயின் தேர்தல் வெற்றி ஏற்றுக் கொள்ள முடியாதது என்று தெரிவித்து மேற்குலக நாடுகள் அவரது பதவிப்பிரமாண நிகழ்சியை பகிஷ்கரித்துள்ளன.

1980 இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது முதல் சிம்பாவேயின் ஜனாதிபதியாக றொபேட் முஹாபே இருந்துவருவது குறிபபிடத்தக்கது. (உ-5)

# அமெரிக்காவின் வேண்டுதலின் பேரில் 1700 பிரிட்டிஷ் படையினர் ஆப்கான் விரைவு

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றுவரும் தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளுக்கு எதிரான போருக்கு ஆயிரத்து 700 படையினரை அனுப்பவுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அல்கெய்டாக்களுக்கு எதிரான போர் இன்னமும முடிவடையவில்லை என்றும், இந்த இராணுவ நடவடிக்கையில் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்கா உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்தே ஆப்கானிஸ்தானுக்கு பிரிட்டிஷ் படையினரை அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். (உ-5)

# யுத்த அடிப்படை மரபுகளை மீறுவதை அனுமதிக்க முடியாது

## ஐ. நா. செயலர் ஷரோனுக்கு கடிதம்

(லண்டன்)

பலஸ்தீனப் பகுதிகள் மீது இஸ்ரேலிய இராணுவம் கடந்த வாரம் நடத்திய தாக்குதல்கள் முழு அளவிலான யுத்தத்தைப் போன்றுஇருந்ததாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஇஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பலஸ்தீனர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது கிபீர் விமானங்கள், உலங்குவானூர்திகள், கடற்படை விமானங்கள் மற்றும் நவீனரக டாங்கிகள் என்பனவற்றின் மூலம் பாடசாலைகள் அம்புலன்ஸ்வண்டிகள் மற்றும் பொது இடங்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன இதனைப் பார்க்கும் போது ஒரு முழு அளவிலான யுத்தத்தை போன்று இருந்தது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் உரிமையுண்டு. ஆனால் அதனைக் காரணம் காட்டி அடிப்படை மரபுகளை மீறுவதையும் மனிதவுரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் அனுமதிக்க முடியாது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு ஏரியல் ஷரோன செயற்பட வேண்டுமென கோபி அனான் அந்த கடிதத்தில் கேட்டுள்ளார்.

(உ-5)

# தி.மு.க. தலைவர்களின் உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்படுகின்றன

## விடுதலை விரும்பி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

தமிழ் நாட்டில் மூத்த தி.மு.க. தலைவர்களின் தொலைபேசிப் பேச்சுக்களை மாநில அரசு ஒற்றுக் கேட்கிறது என்று மாநிலங்கள் அவையில் தி.மு.க பிரதிநிதி விடுதலை விரும்பி குற்றம் சாட்டியுள்ளார்.

இதனையடுத்து தி.மு.க. உறுப்பினர்களுக்கும் அ.இ.அ தி.மு.க. உறுப்பினர்களுக்குமிடையே பெருத்த வாக்குவாதங்கள் அவையில் இடம் பெற்றன.

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்பதை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என்றும்விடுதலைவிரும்பி கேட்டுக் கொண்டார். (து)

# விஷ்வஹிந்து பரிஷத்தை தடை செய்ய வேண்டும்

## வாழப்பாடி கோரிக்கை

விஷ்வஹிந்துபரிஷத்மற்றும் தீவிர சமய அமைப்புகளுக்கு தடைவிதிக்க வேண்டும்என்று முன்னாள மத்திய அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிற சிறுபான்மை அமைப்புகளை தடை செய்ததுபோல் இவற்றையும் வாஜ்பாய் தடைசெய்யவேண்டும் என்றார்.

இதேவேளை, நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் காங்கிரஸ் கட்சியில் த.மா.க இணைவதற்கு ஏதாவதுநிபந்தனைகள் வேண்டுமாயின் அதனைத் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (து)

# வென்ற தங்கப்பதக்கத்தை மீளளிக்க முன்வருகை

(லண்டன்)

கடந்தமாதம் நிறைவுற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் போது பனிப்பாதை சறுக்கல் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்ற ஜொஹான் மூலெக் என்பவர் போதைப்பொருள் உட்கொண்டிருந்த குற்றச்சாட்டு நிரூபிககப்பட்டுள்ளதால், தான் பெற்ற ஒலிம்பிக் பதக்கங்களைத் திருப்பிக் கொடுக்க அவர் முன்வந்துள்ளார்.

நோர்வே நாட்டின் பனிச் சறுக்கல் வீரரான இவர், கடந்த மாதம் நிறைவுற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் மூன் தங்கப்பதக்கங்களை வென்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# தீவிரவாதிகள் தப்பிச்செல்ல காரணமாயிருந்தவர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டின் மதுரை அருகே அல் உமா தீவிரவாதிகள் இருவர் தப்பிச் செல்வதற்கு காரணமாயிருந்த சயத் இப்ராகிமை, இராமநாதபுரத்தில்வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இம் மாதம் சென்னையில் இடம் பெற்ற நீதி விசாரணையை முடித்துக் கொண்டு, வாகனம் ஒன்றில் மதுரைச் சிறைச்சாலைக்கு இவர்கள் கொண்டு செல்லப்பட்டபோது பொலிஸார் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்திய கும்பல் ஒன்று இரு தீவிரவாதிகளையும் மீட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

# சைவப் புலவர்களின் விபரங்கள் சேகரிப்பு

(இணுவில்)

சைவப்புலவர் பட்டம்பெற்றவர்களின் விபரங்களை, அகிலஇலங்கை சைவப்புலவர் சங்கம் சேகரித்து வருகின்றது.

சைவப்புலவர்களின் சேவைகள், பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கி, வரலாற்று ஆவணம் தயாரிக்கும் முயற்சியின் ஓரங்கமாகவே இவ்வாறு விபரங்கள் திரட்டப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது விபரங்களை சைவப் புலவர் வ. கந்தசாமி, 125, அரசடிவீதி, கந்தர்மடம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-49)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
பரீட்சை நேர அட்டவணை மாற்றம்
கலைமாணி பகுதி 1-2000 தேர்வு
(வெளிவாரி)
English as a Second Langauage Level II
29-03-2002 வெள்ளிக் கிழமை (9.30-12.30) அன்று நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைதவிர்க்க முடியாத காரணங்களினால் 06-04-2002சனிக் கிழமை (9.30-12.30) அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.
பதிவாளர்.
19.03.2002
(சி.3736)

ஒட்டார்பின்சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான்எனப்படுதல்நன்று

- குறள்

வலம்புரி

## பொங்குதமிழ் எழுச்சி

யாழ். பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் மீண்டும் பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வைக்கொண்டாடவுள்ளது. உலகவாழ் ஈழத் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை, உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வாக பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அமைந்துள்ளது. அந் நிகழ்வை முதன் முதலில் நடத்திய பெருமையும் புகழும் யாழ். பல்கலைக்கழகத்தையே சாரும். எனினும் அன்றைய இறுக்கமான இராணுவச் சூழல் பொங்கு தமிழ் எழுச்சிக்குப் பல தடைகளைப் போட்டது. ஆயினும் துணிவுடன் யாழ் பல்கலைக்கழகசமூகம்பொங்கு தமிழ் எழுச்சியை அனுஷ்டித்தது. அதன் அறுவடையே இன்று எங்கும் எழுச்சியுடன் பொங்கு தமிழ் நடைபெறுகிறது.

எனினும் யாழ்ப்பாணத்து மக்கள் தமது அபிலாஷைகளை, விடுதலைப் புலிகளின் தடை நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசுக்கும்-சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமாக யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்படவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு அமையும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணத்தில் பொங்குதமிழ் எழுச்சியை நடத்தவேண்டுமென்பதைவலம்புரிதனதுகடந்த 2ந்திகதிய ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியிருந்தது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் பொங்குதமிழ் எழுச்சியானது அனைத்து மக்களினதும் வரவினால் வரலாற்றுப் பதிவை ஏற்படுத்த வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை தனியே யாழ்.பல்கலைக்கழக சமூகம் மட்டுமன்றி மனிதநேய அமைப்புகள், பொது அமைப்புக்கள், பாடசாலைச் சமூகம், உயர் கல்வி அமைப்புகள் யாவும் ஒன்றிணைந்து பொங்குதமிழ் எழுச்சி அமைப்பை உருவாக்கி அதனூடாக மககள் அணியைத திரட்ட் வேண்டும்.

தமிழர்களின் உரிமை, விடுதலைப் புலிகளின் தியாகம், மாவீரர்களின் கனவு என்பவற்றை நிறைவுபடுத் தக்கூடிய தான தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைப்பதற்கு இவ்வெழுச்சி வகை கூறுவதாக அமைவதும் அவசியமாகும். என்பதுடன் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் மக்கள் பிரதிநிதிகளை அழைப்பதும்தேவையானதாகும்.

# விதிநம்மை ஆளுகிறது என்றாலும், மதியினாலும் முயற்சியாலும் விதிக்குவிதி செய்வர் ஆன்றோர்

மனிதன் எவ்வளவோ விஷயங்களைஎண்ணுகிறான். அவைகள் எல்லாம வெற்றியடைய வேண்டும் என்றும் விரும்புகின்றான். ஆனால் காண்பது என்ன? பல இடங்களில் தோல்விதான். இத் தோல்விக்குக் காரணம் முயற்சியின்மை ஒருபால் இருக்க தன் எண்ணத்தில் அழுத்தமில்லாமையும், அதற்கு ஏற்பச் செயற்படாமையுமே காரணம் ஆகும். பலவகையிலும் இரவு பகலாக முயற்சி செய்தவனும் வெற்றியடையாமல போகிறான். அத்தகைய சந்தர்ப்பங்களில் 'விதி விதி' என்கிறோம். இவ்விதி என்பது என்ன?

### ஊழிற் பெருவலி யாவுள

விதியை ஆராயாத கவிஞரே இல்லை. காவியமே இல்லை. உலகிற்கே பொதுவான நூல் - காலத்தைக் கடந்து - எல்லோருக்கும் பொதுவான உண்மைகளை போதிக்கும் நூல்களுள் ஒன்றாகிய திருக்குறளில் வள்ளுவர்,

'ஊழ்' என்றே ஒரு அதிகாரம் வைத்துள்ளார்.

வகுத்தான் வகுத்த வகை யல்லால் கோடி தொகுத் தார்க்கும் துய்த்தல் அரிது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று.

சூழினும் தான் முந்துறும் என்று அவர் குறிப்பிடுகிறார் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' நிகழ்ச்சியை அழகாகக் காவியமாகச் சித்தரித்துள்ளார். மற்றும் ஒரு புலவர், நதியின் பிழையன்று நறும்புனலின்மை விதியின் பிழையே பிழை-புனலில் நீர் தூய்மை இல்லாமையும் விதி வசத்தால் என்கிறார். மற்றும் ஒருவர் அடுத்து முயன்றாலும் ஆகுநாளின்றி ஆகா எனவும் வருந்தியழைத்தாலும் வாராதவாரா,

பொருந்துவன போமின் என்றால் போகா என விதியைச் சிறப்பித்துள்ளனர்.

### முயற்சியின் நிலை

இவைகளிலிருந்து நாம் அறிவது என்ன? விதிவலிது என்பதாகும். அவ்வாறாயின் நம் மீது ஆதிக்கம் செலுத்த விதிக்குமட்டும்தானா உரிமை. அவ்வாறாயின் முயற்சியின் நிலை என்ன? அதையும் புலவர்கள் விட்டுவிடவில்லை. 'முயற்சி திருவினையாக்கும் எனவும் தன்னைத் தலையாகச் செய்வானும் தான் எனவும் கூறியுள்ளனர். கீதையில் உன்னை நீயே உயர்த்திக் கொள்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. நீ எதைச் செய்கிறாயோ அதுவே ஆகிறாய் என்கிறார்கள். ஆகவே மதியும் (முயற்சியும்) நம் வாழ்வில் பெரும் பாகத்தை மாற்ற வல்லதாகும்.

ஆகவே விதியின் செல்வாக்குப் போலவே முயற்சிக்கும் செல்வாக்கு உண்டு. அப்படியாயின் இது புதிராகவல்லவோ இருக்கிறது. விதி எவ்வாறு ஏற்பட்டது. நாம் செய்கின்ற வினைகள் தான் விதியாயிற்று. ஆகவே நம் விதியை உண்டாக்குவது நாம் தானே. விதிக்கும் காரணம் நாமே, கம்பராமாயணத்தில் இந்த நிகழ்ச்சி அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. கூனி இராமனைக் காட்டுக்கு அனுப்ப எண்ணி, கைகேயியிடம அவள் மனதைக் கலைக்கச் செல்கின்றாள். இதை வர்ணிகக எண்ணினார் புலவர். அவருக்கு உடனே இனிவரப் போகும் நிகழ்ச்சிகள ஞாபகத்துக்கு வந்துவிட்டன. இராவணன் வதம்தானே மிகமுக்கியமான நிகழ்ச்சி, புலவர் கற்பனை செய்கிறார். இராவணன் இழைத்த தீமையெல்லாம் உருவெடுத்தது- அது தான் கூனி. தீமையின் உரு இராவணனை அழிக்கச் சதி செய்கிறது.

இதைத்தான் காவியத்தில் 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்,

### வினையின் பயனே விதி

ஆகவே நாம் செய்த வினையின் பயனே விதி. ஆகவே விதிவசத்நால் நேர்வையும் நாம் உண்டாக்கிக் கொண்டவைகளேயாகும். அதனால் தான் ஒரு புலவர் 'இருந்தேங்கி நெஞ்சம் புண்ணாக வருந்தாதே' என்கிறார். போனது போகட்டும் இனியேனும் வரப்போகும்விதியை நிர்ணயம் செய்து கொள்' என்கிறார். அதற்காக முயற்சி செய்வாயாக. விதிவசத்தால் அரிச்சந்திரன் பதி இழந்தனம், பாலனை இழந்தனம் எனினும் கட்டுரை இழக்காமல் தன் விதியை நிர்ணயம் செய்து கொண்டனன். பாரதியும் பாரதத்தின் விதி வகுப்போய்வா வா வா என்று அழைக்கிறார். மார்க்கஸ் அருனியஸ் கூறியது போல் விதிவசத்தால் கூர்மையான மூளை ஏற்படவில்லையே எனக் கஷ்டப்படுவதைவிட இருக்கின்ற மூளையை நன்கு பயன்படுத்தினாலும் போதுமானது. இல்லாததை எண்ணி ஏங்க வேண்டாம். பலரின் வாழ்வு கருகுவதற்கு காரணம் இல்லாததை எண்ணி ஏங்குவதாகும்.

'அன்ன விசாரம் அதுவேவிசாரம் அது ஒழிந்தால்-சொர்ண விசாரம்-தொலையா விசாரம் நற்றோகையரைப் பன்ன விசாரம், என்ன விசாரம் வைத்தாய்'

என்றபடி, எப்பொழுதுமே துன்பங்கள் நிறைந்த வாழ்வில் இல்லாததை வேறு எண்ணி ஏங்குவதால் துன்பம்தான் மிகும்.

ஆகவே விதி நம் வாழ்வை ஆளுகிறது. எனினும் நல் வாழ்விற்கான விதியை அமைத்துக் கொள்வது நம் மதியினாலும் முயற்சியினாலுமேயாகும். விதிக்கு விதி செய்வர் ஆன்றோர் அறிவு லற்றம் காக்கும் கருவி அல் அவா?- விதியை மதியால் உண்டாக்கிக் கொள்ளலாம்.

**எஸ். சௌந்தரராஜன்**
குருகுலம்

## தினசரி தியானம்

### ஞானக்கண்

கண்மேலுங் கண்ணொன்றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

- அப்பர்

கண்ணில்லாக் கழுகு வெறும் சிறகுகொண்டுபறக்க முடியாது. ஞானக்கண்ணில்லாத கருமம் அத்தகையது. நல்லறிவே, நீ எனக்கு ஞானக் கண்ணை நல்குவாயாக.

உடலுக்கு ஒளிதருவது ஞானக்கண். அது சுடர் விட்டு ஒளிரும் போது உடலெங்கும் ஆத்மஜோதி ஒளிர்கிறது. ஞானக்கண்ணில்லாதவர்க்கு உடல் முழுதும் இருள் சூழ்ந்ததாகி விடுகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## வளர்முக நாடுகள் சிறுவர் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும்

### ஐ.நா. மாநாட்டில் உரை

(கொழும்பு)

வளர்முக நாடுகளில் வளங்கள் குறைவாக இருந்த போதிலும், சிறுவர்களின் கல்வியிலும், ஆரோக்கியத்திலும் கூடுதலான அக்கறை காட்ட வேண்டும் என யுனிசெவ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மெச்சிக்கோவில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, சிறார்களே எதிர் காலத்தில் ஒரு நாட்டின் அதிதிகள். அவர்களின் உடல் நலத்திலும், உளநலத்திலும் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

வளர்முக நாடுகளிலே, சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல், பாலியலுறவுகள் என்பன இடம் பெற்று வருகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (36)

**தவக்காலம் - ஐந்தாம் வாரம் (ஊதா)**
**திபா 3:52-56. 'என்றென்றும் அவரைப் புகழ்ந்து பாடி ஏற்றி போற்றுங்கள்'**


உண்மையில் வாழ்பவர்கள் விடுதலை பெற்றவர்கள் என்கிறார் இயேசு. இயேசு காட்டும் இந்தஉண்மை இரண்டு வாயில்களை உள்ளடக்கியது. முதலாவது கடவுளைப் பற்றிய உண்மையை அறிவது. 'வழியும் உண்மையும் வாழ்வும் நானே' (யோவா 14:6) என்றார் இயேசு உண்மையானவராகிய இயேசுவின் குரல் கேட்டு, அவரை ஏற்றுக்கொண்டால் விடுதலை பெறுவோம். உண்மையாக வாழ்வதால், பேசுவதால் இழப்புகள் வரலாம். இறப்பும் வரலாம்.

உண்மை பேசிய தானியேல் இறைவன் தந்த விடுதலையைக் கண்டதை முதல் வாசகம் குறிக்கிறது. இரண்டாவது நமது நிலைபற்றிய உண்மை அறிவது. 'உன்னையே நீ அறிவாய்' என்றார்சாக்ரடீஸ். 'நான் காந்தியைக் காண அஞ்சுகிறேன், ஏனெனில் தனது குறைகளை ஏற்க அவர் அஞ்சுவதில்லை' என்கிறார் மவுன்ட் பேட்டன். தம்மைப் பற்றிய உண்மையைஅறிய மறுத்து, தெரிந்த உண்மையை ஏற்காமல், உண்மையைத் திரித்துப் பேசுபவர் பலர்.

நமது குறைநிறைகளை, பாவப்பலவீனங்களைஏற்க பலம் இல்லாததால் மகிழ்வை இழக்கிறோம். தம்மைப் பற்றிய உண்மையை மறுத்து, நற்செய்திக்குஎதிர்சாட்சியானோர் திருச்சபையிலும் உண்டு. திருத்தந்தை வரலாற்றில் நிகழ்ந்த திருச்சபையின் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டதால் ஏற்பட்ட விடுதலை உணர்வு மிகப் பெரிது. இன்றைய குறைகளையும் நாம்ஏற்றுக்கொண்டால் விடுதலை பெறுவோம் என்பது இயேசு தரும் உறுதி.

- காவலன்

# மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி



மூளாயைச் சேர்ந்த அமரர்.பொன்னம்பலம் விஜயரட் ணம் (பேபி) (பழம்பெரும் விளையாட்டு வீரர்) அவர்களின் ஞாபகார்த்தமாக 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 15 வயதிற்கு கீழ்பட்டவர்களுக்கும் என இரண்டு சுற்றுப் போட்டிகள் சங்க ரத்தை மைதானத்தில் நடைபெறவுள் ளன. ஆட்டங்கள் ஒவ்வொன்றும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்களை கொண்டதாக அமையும். 2002-04-01 ந் திகதியில் வயது கணிக்கப்படும்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பங்கள் அனுப்புவோர் 35 வயதிற்கு மேற்பட்டோர் ரூபா 100 உம், 15 வயதிற்கு கீழ்பட் டோர் ரூபா 50 உம் செலுத்த வேண்டும். தொடர்பு ச.வைத்தியநாதன் சிவன் கோயிலடி சித் தன்கேணி (கிராம உத்தி யோகத்தர் சுழிபுரம் மேற்கு)

இதற்கான விண்ணப்பம் 31-03-2002 ஞாயிறு காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ச.வைத்தியநாதன்
*சிவன் கோயிலடி சித்தன்கேணி*
*(கிராம உத்தி யோகத்தர் சுழிபுரம் மேற்கு)*

(C/3730)

---

**INSTITUTE OF ENGLISH EDUCATION & COMPUTER DIVISION**

ஆங்கில மொழி
தரம் 3 முதல் A / L வரை,

*1ம் தவணை மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம்*

கிடைக்கும் இடங்கள்:
1) ஆல்சிலோன் டிஸ்மஸ்ட்ல்
2) நாவலர் கல்வி நிலையம்

ஆசிரியர்:-
க.றமணதாசன்
*121/1 அரசடிவீதி,*
*கந்தர்மடம்*

---

**INSTITUTE OF ENGLISH EDUCATION & COMPUTER DIVISION**

(PERSONAL & GROUP CLASSES)

121/1, அரசடி வீதி,
கந்தர்மடம்.
GRADE 3 - O/L & A/L

BY:
Mr.K.Ramanathasan (4810)

---

## இலங்கை மின்சார சபை மின்தடைப்பற்றிய
# முக்கிய அறிவித்தல்

*இன்று 20.03.2002 முதல் நான்கு நாட்களுக்கு கூல் எயர் நிறுவனம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின் வழங்குவதாக எமக்கு திடீரென அறிவித்துள்ளது. இதன் காரணமாக மார்ச் 20,21,22,23 ம் திகதிகளில் யாழ். குடாநாட்டில் யாழ் நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மின் வெட்டு அமுலில் இருக்கும். அத்துடன் இரவில் திட்டமிட்டதற்கு மேலாக சில உப மின் நிலையங்களில் 3 மணிநேர மின் வெட்டு அமுலுக்கு வரும்.*

*கூல்எயர் நிறுவனம் எமக்கு நேரத்துடன் தம்மால் வழங்கப் படக்கூடிய மின் வலுபற்றி தெரியப்படுத்தாததால் முற்கூட்டியே இவ் அறிவித்தலை விளம்பரப்படுத்த முடியவில்லை. எனவே இதனால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.*

பிரதிப் பொது முகாமையாளர்
(வடக்கு)

பி.பொ.மு.(வ) அலுவலகம்,
இ.மி.சபை,
536 /1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
2002.03.20

(C/3732)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

செய்முறைப்பரீட்சை நாடகமும்
அரங்கியலும்
கலைமாணி பகுதி II - 2000
(வெளிவாரி)

மேற்படி செய்முறைப் பரீட்சை தொடர்பாக பரீட்சார்த்திகள் 27.03.2002 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நுண்கலைத்துறைத் தலைவரை யாழ்.பல்கலைக்கழகத்தில் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.


பதிவாளர்
19.03.2002

(C/3735)

---

# பொன்விழா வாழ்த்துக்கள்

21-03-2002



வாழ்க்கை சுமை பல சுமந்து
தியாகசுடராகி – எம்
அறுவர் நலன் காத்து பின் பேரர்
நலன் காண
கனடா சென்றின்று இல்லறப்
பொன்விழா காணும்
எம் தாய்தந்தையர் சிறப்புடன்
பல்லாண்டு வாழ இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

திரு-செ-கு-சண்முகநாதன்
*(சி.கூ.அ.உ.ஆணையாளர் வடகிழக்கு மாகாணம்)*

மகன்,மருமகள்
பேரப்பிள்ளைகள்.

---

## -IIS இன் கணனிக் கண்காட்சி
# INFOTECH - *JAFF* - 2001

நவீன கணனி யுகத்தின் விந்தைகள் பலவற்றை நீங்கள் நேரில் கண்டு களிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம்:- IIS தலைமை நிறுவனம் 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
காலம்:- மார்ச் 23,24,25,26ம் திகதிகளில் காலை 9.00மணி முதல் மாலை 7.00மணிவரை

இக் கண்காட்சியினூடாக நீங்கள்
தகவல் தொழில்நுட்ப அறிவில் ஒரு படி உயர்ந்து கொள்ளுங்கள்

---

## இன்று முதல்

## ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையில்..

## உங்கள் தங்கத்திற்கும் தங்க ஆபரணங்களிற்கும்
# உடனே பணம் பெறும் வசதி



- குறைந்த வட்டி
- முற்றிலும் அந்தரங்கமான சேவை
- அதிவிரைவான பண்பான சேவை
- அதிகூடிய கடன் தொகை
- பகுதிக் கொடுப்பனவு வசதி
- தங்கத்தின் தரம் எதுவித சேதாரமுமின்றி கணனி மூலம் பரீட்சிக்கப்படும்

அடகு வைத்தவர் விபத்தினால் மரணம் அடைய நேரிட்டால் ரூபா 25,000 வரையான கடன் தொகை வங்கியினால் உள்வாங்கப்பட்டு எதுவித கொடுப்பனவும் இன்றி தங்க நகைகள் வாழ்க்கைத்துணைக்கு / சட்டரீதியான உரிமையாளருக்கு வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்...

முகாமையாளர்
ஹற்றன் நஷனல் வங்கி
212,214 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.